# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 கன்னி, துலை (15, 31-10-89—15-11-89) ஓர் உருபா (இதழ் எண்:


# தில்லியில் யார் ஆட்சிக்கு வந்தாலும், நாம் உரிமையுடன் வாழ முடியாது; தமிழர் வடநாட்டு வணிகர்களுக்கும் பார்ப்பனர்க்கும் அடிமையாகவே இருப்பர்.

## இந்தித் திணிப்பும் நீங்காது! இலங்கைச் சிக்கலும் தீராது!

## ஆனாலும் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிதான் நீடிக்க வேண்டும்!

ஒரு சமயம் அரேபியாவில் ஆட்சி மாற்றம் நிகழ இருந்தது. அப்பொழுது **ஈசாப்**பிடம் ஆட்சி மாற்றத்தை விரும்பாதவர் சிலரும் விரும்புகிற சிலரும் அவரிடம் வந்து, "புதிய ஆட்சி மாறுவதால் மக்களுக்கு ஏதேனும் கூடுதலான நன்மைகள் விளையுமா?" என்று கேட்டனர். அதற்கு விடையாக **ஈசாப்** கீழ்வரும் கதையை அவர்களிடம் சொன்னார்.

"பல சரக்கு வணிகன் ஒருவன் தனக்குச் சொந்தமான கழுதையின் மேல் இரு பக்கமும் கனமான மூட்டைகளைக் கட்டித் தொங்கப் போட்டுக் கொண்டும், முதுகின் மேல் பெரிய மூட்டைகளை அடுக்கிக் கொண்டும், ஒரு காட்டின் வழியாகத் தொலைவில் உள்ள ஓர் ஊரை நோக்கி, வணிகம் செய்யப் போய்க் கொண்டிருந்தான்.

அவன் நடுக்காட்டில் சென்று கொண்டிருந்த பொழுது, தொலைவில் குதிரைகள் வரும் குளம்படிகளின் ஒலி கேட்டது. உடனே அவ் வணிகன் கழுதையை ஒரு மரத்தின் ஓரமாக நிறுத்தி விட்டு, அம்மரத்தின் மேலேறித் தொலைவில் குதிரைகள் வருகின்றனவா என்று பார்த்தான். அவன் எண்ணியபடியே தொலைவில் நான்கைந்து குதிரைகளின் மேல் கள்வர்கள் சிலர் அவ் வழியாக வந்து கொண்டிருந்தனர். அவர்களிடம் தான் அகப்பட்டுக் கொண்டால், பெரிய தொல்லையேற்படும் என்றும், பொருள்களும் கொள்ளை போய் விடும் என்றும், தன்

'தமிழே உயிர்'-என்று வாழ்ந்த

# பாவேந்தர் பாரதிதாசனார்

## பெயரில் உள்ள பல்கலைக் கழகத்தில் தமிழைப் பாடமொழியாக்கும் தீர்மானத்தைத் தோல்விடையச் செய்தனர்!

திருச்சியில் உள்ள பாவேந்தர் பாரதிதாசனார் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் மட்டுமே தமிழர். பெயர் பர். எசு. முத்துக்குமரன் அவர் தலைமையில் 'கடந்த அக்டோபர் 31-இல் பல்கலைக் கழகத்தின் கல்வித் தொடர்புக் குழுக் கூட்டம் நடந்தது.

அது, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில், 1990-91-இன் கல்வியாண்டிலிருந்து, அனைத்துப் பட்ட வகுப்புகளுக்கும், தமிழ்மொழியைப் பாட மொழியாக்க வேண்டும் என்று பர். பி. ஆர். சீனிவாசன் கொண்டு வந்த தீர்மானத்தை இக் கூட்டம் தோல்வியடையச் செய்தது.

அப்பொழுது, ''மாணவர்கள் மீது, குறிப்பிட்ட பாடமொழியைத் திணிப்பதற்குப் பல்கலைக் கழகத்திற்கு உரிமையில்லை'' என்று துணைவேந்தர் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் ''கல்லூரிகளில் தமிழ்ப் பாடமொழி வகுப்புகளில் சேர விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு'' என்றும், ''ஆங்கிலப் பாடமொழி வகுப்புகளில் சேர்வதைத்தான் பெருமளவு மாணவர்கள் விரும்புகிறார்கள்'' என்றும் கூறினார்.

(தமிழில் படித்தவர்களுக்கு அரசுப் பணியில் முதலிடம், சலுகை உண்டு என்று தமிழ்நாட்டு

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

| | பெயர் | பொறுப்பு | வகுப்பு |
|---|---|---|---|
| 1. | கே. எசு. வெங்கட்டராமன் | துணைப் பதிவாளர் | பார்ப்பனர் |
| 2. | சாமிநாதன் | ,, | ,, |
| 3. | எசு. இலட்சுமி (ஆட்சிக்குழு உறுப்பினர்) | பேராசிரியர் | ,, |
| 4. | எசு. பாசுகரன் ,, | வாசகர் (Reader) | ,, |
| 5. | கோபாலகிருட்டிணன் | துணைவேந்தரின் உதவியாளர் | ,, |
| 6. | இராகவன் | பதிவாளரின் உதவியாளர் | ,, |
| 7. | என். இராமபத்திரன் | பேராசிரியர் | ,, |
| 8. | சீனிவாசன் | ,, | ,, |
| 9. | எ. லெட்சுமி | வாசகர் | ,, |
| 10. | எம். ஆர். சுப்பிரமணியன் | ,, | ,, |
| 11. | என். இராமானுசம் | ,, | ,, |
| 12. | வி. பி. அத்ரேயா | பேராசிரியர் | ,, |
| 13. | கே. எசு. இராமமூர்த்தி | ,, | ,, |
| 14. | இராம்மோகன் ராவ் | ஆற்றல்துறை (Energy Dept) | ,, |
| 15. | சேது மாதவன் | ,, | ,, |
| 16. | வந்தன சக்ரவாத்தி | குமுக அறிவியல் (Social Science) | ,, |
| 17. | நாகராசன் | வேதியல் (Chemistry) | ,, |
| 18. | விசயலெட்சுமி. | (துணை உதவியாளர் கணினி) (Computer) | ,, |
| 19. | வெங்கடேசு | துறைக்கணக்காளர் (Section Acct) | ,, |
| 20. | கண்ணன் என்கிற ரகுநாதன் | பதிவாளர் (Registrar) | ,, |
| 21. | சாவித்திரி | கட்டுப்பாட்டுத்துறை (Controler Section) | ,, |
| 22. | வைத்தியநாதன் | ,, | ,, |
| 23. | மோகன் | கணினி (Computer) | ,, |
| 24. | சாந்தி | கட்டுப்பாட்டாளர் (Controler) | ,, |
| 25. | இராமகிருட்டிணன் | ,, ,, | ,, |
| 26. | கிருத்திகா | ,, ,, | ,, |
| 27. | மங்களம் | பொது மக்கள் தொடர்புத் துறை (P. R. O. Section) | ,, |
| 28. | அரங்கப்பன் | என். எசு. எல். பிரிவு | ,, |
| 29. | கோ. சுப்பிரமணியன் | பயிரியல் துறை (Botony) | ,, |
| 30. | கே. வி. கிருட்டிணமூர்த்தி | ,, ,, | ,, |
| 31. | இரா. பாசுகரன் | இயல்பியல் துறை (Physics) | ,, |

—நன்றி. தெரிந்த கதை (20-9-89)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கழுதையையும் தன்னையும் கூட அவர்கள் கொண்டு போய் அவர்களுக்கு வேலைகள் செய்யப் பயன் படுத்திக் கொள்வார்கள் என்று அஞ்சினான்.

உடனே, அம் மரத்திலிருந்து பரபரவென்று இறங்கி வந்து, மரத்தினடியில் உள்ள கழுதை-யிடம், திருடர்கள் வந்து கொண்டிருப்பதையும், அவர்களால் நேரவிருக்கும் ஏதத்தையும் (ஆபத்தையும்) எடுத்துச் சொல்லி "ஓ! கழுதை! வா வா' எங்காகிலும் மறைவாகப் போய் ஒளிந்து கொள்ள-லாம்'' என்று கூறினான்.

அதற்கு அவ்வறிவாளிக் கழுதை, "ஓ! வணிகனே! நீ வேண்டுமானால் எங்காவது இம் மூட்டைகளுடன் போய்த் தப்பித்துக் கொள். நான் அவர்களிடம் அகப்பட்டுக் கொள்வதைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. ஏனென்றால், நான் உன்-னிடம் இருந்தாலும் மூட்டை சுமக்க வேண்டும்; அத் திருடர்களிடம் போனாலும் மூட்டை சுமக்க வேண்டும். யார் என்னுடைய ஆண்டையாக இருந்தாலும் என் சுமை குறையப் போவதில்லை'' என்று சொன்னது,'' என்றார்.

இந்தக் கதையை கூறி முடித்து, "இந்தக் கழுதையைப் போன்றவர்கள் தாம் பொதுமக்கள்; எந்த ஆண்டையின் ஆட்சியிலும் அவர்களின் சுமைகள் குறையப் போவதில்லை; துயரங்கள் ஆறப் போவதில்லை'' என்றார் ஈசாப்!

ஈசாப் அன்று கூறிய ஆட்சியிலக்கணம் இன்று அனைத்து ஆட்சிகளுக்கும் பெரும்பாலும் பொருந்தும்படியாகவே இருப்பதை ஆய்ந்து பார்ப்பவர்கள் உணரலாம்.

இன்றுள்ள இராசீவ் ஆட்சியின் கொடுமைகளை இந்தியாவிலுள்ள அனைத்து மாநில மக்களும், தேசிய இனங்களும் உணர்கின்றனர். அதனால் நடுவண் அரசில் ஒரு மாற்றத்தை உருவாக்க விரும்புகின்றனர்; அவ்வாறு எதிர்பார்க்கவும் செய்-கின்றனர். அதற்கேற்ப இக்கால் பாராளுமன்றத் தேர்தலும் வந்திருக்கின்றது. இந்தத் தேர்தலில் இராசீவ் ஆட்சியை வீழ்த்தி விட்டு. வி.பி.சிங். தலைமையில் உள்ள எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்கிறது. இந்தக் கூட்டணியில் தென்மாநிலக் கட்சிகளான என். டி. இராமராவின் தெலுங்கு தேசமும், கலைஞரின் தி. மு. கழகமும் இணைந்திருக்கின்றன. இரண்டு கட்சிகளும் வி. பி. சிங்கின் கூட்டணியில் இணைந்திருந்தாலும் அக் கட்சிகளுக்கெனத் தனித் தனிக் குறிக்கோள்களும் கோட்பாடுகளும் இருந்தாலும், இராசீவ் ஆட்சியை மாற்றியமைப்பதே நமக்கு ஒரு மனநிறைவைத் தருகிறது.

இருப்பினும், நம்மைப் பொறுத்தவரை கலைஞர் இராசீவின் வெற்றியை நினைப்பதைவிட, ஒடுங்கிக் கிடக்கும் நம் அருந்தமிழ்ப் பேரினத்தின் முன்னேற்ற முயற்சிகளையும், நம் பெறலருந் தமிழ் மொழியின் தழைப்பையும் நினைத்திட வேண்டும் என்பதுதான் நம் குறிக்கோள், கோரிக்கை, வேண்டுதல்—யாவும் ஆகும்!

இனி, தமிழைப் பொறுத்த அளவிலும், தமிழர்களைப் பொறுத்த அளவிலும், தமிழினப் பகைவர் இராசீவும் ஒன்றுதான்; வி. பி. சிங்கும் ஒன்றுதான்: எனவே, நம்மைப் பொறுத்த வரையில், தில்லியில் யார் ஆட்சிக்கு வந்தாலும், தமிழ்நாடு உரிமையுடன் வாழ முடியாது; வாழவிட மாட்டார்கள்! அதனால், தமிழர்கள் வடநாட்டுப் பார்ப்பனர்க்கும் வணிக முதலாளிகளுக்கும் அடிமையாகவே இருப்பர். அத்துடன் இந்தித் திணிப்பும் நீங்காது; இலங்கைச் சிக்கலும் தீராது!

ஆனாலும், தமிழர்க்கென ஓர் உரிமை வாழ்வு கிடைக்கும் வரை, அதற்கென முயற்சிகள் நடைபெறும் வரை, தமிழ்நாட்டில், இராசீவ் கட்சியோ, அதை மணிக்கம்பளம் போட்டு வரவேற்கும் அவரின் அடிமைகள் ஆட்சியோ வரவே கூடாது. தி.மு.க. ஆட்சிதான் நீடிக்க வேண்டும்! அதுதான் தமிழர்களுக்கு நல்லது; பாதுகாப்பானது! O

## பொழிலன், முகிலன் இருவரையும் தலைக்கு இருபதினாயிரம் உருபா சொத்துப் பிணையலில் விடுவித்தது, சென்னை உயர்நெறி மன்றம்!

கடந்த 16 மாதங்களாகத் திருச்சி, மதுரை, கோவை ஆகிய சிறைகளில் அடைபட்டிருந்த பொழிலனையும், முகிலனையும் இறுதியாக, மேல் முறையீட்டில், சென்னை உயர்நெறி மன்றம் கடந்த 27-10-89-ஆம் பக்கல், ஒவ்வொருவருக்கும் இருபதினாயிரம் உருபா சொத்துப் பிணையலில் விடுவிப்புச் செய்தது: இருவரும் சென்னைநகர எல்லையைத்தாண்டி எங்கும் செல்லக் கூடா-தென்றும், ஒவ்வொரு நாளும் சென்னை, பறங்கி-மலைக் காவல் நிலையத்தில் கையெழுத்திடவேண்டு மென்றும் உயர்நெறி மன்றம் அவர்களுக்குக் கட்டுப்பாடு (Condition) இட்டுள்ளது:

அத்துடன், இருவரையும் மேற்கொண்டு எந்தக் குற்றச்சாட்டின் மேலும் காவலர்கள் தளைப்படுத்தக் கூடாதென்றும் உயர்நெறிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது; அதற்கு முன் பிணையலும் வழங்கியுள்ளது. O

### அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். O

Scanned with CamScanner

தொடர் : 2. (முன்னிதழ்த் தொடர்ச்சி)

# அமிழ்தன் கட்டுரைக்கு விளக்கமும் சில மறுப்புக் குறிப்புகளும்!

-அதியமான்-

**குண்டு வெடிப்பில்—மக்கள் நிலை—போராளிகள் அணுகுமுறை—தனித் தமிழ்நாட்டுக் கொள்கை ஆகியவற்றில் திரு. அமிழ்தனின் தடுமாற்றம்:-**

திரு. அமிழ்தன் அக் கட்டுரையைக் காவிரி நீர்ச் சிக்கலில் தொடங்கி அதன் ஆய்வில் சற்றுத் தடுமாறி அதை அலசுகையில், கை கடுத்ததும் கீழே போட்டுவிட்டு, நேரு சிலை உடைப்பு, கொடைக்கானல்வெடி குண்டு நிகழ்வு, அரியலூர் நிகழ்வுகளில் கை வைத்து, அவை சற்றுச் சூடாக இருந்ததும், விரல்களை வெடுக்கென்று எடுத்து வாயில் வைத்துச் சப்பி, அதன்பின் என்ன நினைத்தாரோ, தனித்தமிழ் நாட்டை விட்டே ஓடுகிறார். ஆனால் அவர் எங்கே ஓடுகிறார் என்பது அவருக்கே வெளிச்சம்! ஏனென்றால் தில்லி ஆட்சியின் கொடுமைகளையும் தமிழக அரசின் இயலா நிலைகளையும் பேசிய அளவில் அவர் இங்கு இருக்க விரும்ப மாட்டார். ஆனால், திரு. அரு .கோபாலன் குறிப்பது போல 'நம்பூதிரிகள் இருக்கும் இடத்திற்கோ அல்லது மார்க்சிய,இலெனினியம் நடைமுறையில் எங்கேயாவது இருந்தால் ஒருவேளை அங்குச் செல்வார்' எனக் கருத இடம் உள்ளது. அவர் உழைக்கும் மக்கள், உழைக்கும் மக்கள் எனக் குறிப்பது யாரென்று விளங்கவில்லை. உழவர்களையா, தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களையா, அரசு அலுவலர்களையா, அல்லது மூளையால் உழைக்கும் அறிவாளிகளையா, காடுகளில் ஆடு மாடுகளை மேய்த்துப் பிழைப்பவர்களையா, படைத்துறையினரையா—காவலர்களையா, அவருக்குத்தான் தெரியும். ஆனால் இவர்கள் யாவரும் மக்கள். இந்த மக்களின் உரிமை வாழ்விற்காகவே விடுதலை இயக்கங்கள் போராடுகின்றன என்பது மட்டும் உண்மை.

திரு. அமிழ்தன் உழைக்கும் மக்களின் போராட்டத்திற்கு எதிரானதே தமிழ்நாடு விடுதலை இயக்கம் மேற்கொண்ட குண்டு வைத்துத் தகர்த்தல் எனக் குறை கூறி, இச்செயல் தற்கொலைக்குச் சமமானது என்று தமிழ்நாடு விடுதலைப் போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கிறார். இச் சிக்கல் மிக ஆழமானது என அவரே குறிப்பிடுகிறார். ஆம் மிக ஆழமாக இதனைச் சிந்திக்க வேண்டும். "உழைக்கும் மக்கள் போராட்டம் என்பதைச் சம்பளம், நன்னர் தொகை (Bonus) பெறுவதற்குமட்டுமே எனக் கொண்டால், அவர்கள் இதற்காகவே கிளர்ச்சி செய்கிறார்கள். இக் கிளர்ச்சியால் தொழிலாளர்கள் எவ்வகைப் பயனையும் அடைந்ததில்லை. (தந்தை பெரியார் கூற்று) தொழிலாளர்கள் ஏதோ 2 அணா 4 அணா கூலி உயர்த்தப்படுவதற்காகப் போராடுவது என்பது பயனற்றதே ஆகும். ஏனெனில் நமது கிளர்ச்சியில் 2 அணா கூலி உயர்த்தித் தருவானேயானால் தொழிலாளர்களால் செய்யப்படும் பொருட்களின் பேரில் முதலாளிகள் ஒன்று சேர்ந்து நாலணா மிகுதிப்படுத்தி விடுவார்கள். அந்த ' உயர்ந்த விலையைக் கொடுத்துப் பொருள் வாங்க வேண்டியவர்கள் தொழிலாளிகளேயாவார்கள். ஆகவே முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வலக்கையில் கூலி அதிகம் கொடுத்து இடக்கையில் அதைத் தட்டிப் பிடுங்கிக் கொள்வார்கள்'' (குடியரசு. 1-10-1933) எனத் தந்தை பெரியார் தொழிலாளர்களின் கிளர்ச்சியை ஆய்ந்து கூறுகிறார்கள். உழைக்கும் மக்கள் என உழவர்களை எடுத்துக் கொண்டால் காவிரிச் சிக்கலைத் தீர்விற்குக் கொண்டுவர அவர்களின் கிளர்ச்சி உறுதியானதாக இன்னும் உருவாகவில்லை. எனவே அதுவும் பயனற்றதே. இப்படி உழைக்கும் மக்கள் போராட்டத்திற்கு எதிரானது என்று குறிப்பதை விட உழைக்கும் மக்களின் போராட்டத்தில் பயனில்லை என்பதால் குண்டு வைத்துத் தகர்த்தல் பயனுள்ள போராட்டம் எனக் குறித்திருக்க வேண்டும். இதுவே சரியானதாகும்.

ஒரு நாட்டின் உரிமைப் போராட்டத்தில் போராளிகள் உயிர் இழப்பதும், தற்கொலை செய்ய வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுவதும் இயல்பே ஆகும். உயிர் கொடுக்காமல் உரிமை மீட்பு நடந்ததாக வரலாறுகள் இல்லை. இந்திய விடுதலை போராட்டத் தலைப்பு கொல்லாமை (அகிம்சை) வழியாயினும் அப் போராட்டத்திலும், கொலைகள், பாலங்கள், தொடர் வண்டித் தகர்ப்புகள் நடந்தன. எனவே ,போராட்டம் என்பது உயிர் போக்கும் களந்தானே.

போராட்டத்தின் நிலைகளை ஆய்வதற்கு முன் தமிழரசனைப் பற்றித் திரு. அமிழ்தன் அவர்களின் மதிப்பீட்டைச் சிறிது சிந்தித்தே ஆக வேண்டும். தமிழ்நாடு விடுதலைப் படை என ஒரு படையை முதன் முதலில் தமிழகத்தில் தோற்றுவித்தவரே தமிழரசன் தான். முதல் பலியானவரும் அவரே.

அவருடைய பாதை எது என்பதற்கு திரு. அமிழ்தன் அவர்கள் கொடுக்கும் விளத்தம் (த.நி.123) அ்து இயல்பாக மாந்தர்களுக்குரிய எதிர்ப்புணர்வையும், அதனுல் உடனடியாக எழும் தனியாள் பழி வாங்கலேயுமே அடித்தளமாகக் கொண்ட அழித்தொழிப்புப் பாதையே ஆகும். இது தமிழரசனேப் பற்றி எடை போட்டு எடுக்கப் பட்ட தப்புக் கணக்கு. ஏனென்ருல் தமிழரசனை நன்கு தெரிந்ததோடு அவ் வழக்கை நடத்தும் கி. இராசமாணிக்கம் மயிலாடுதுறை அவர்கள் இரட்டை வேடமா என்ற தம் மடலில் (த.நி 125) தமிழரசன் ஒரு தலை சிறந்த மாந்தத் தன்மை-யுள்ளவர் எனக் குறிப்பிட்டுவிட்டு அரியலூர் வழக்கில் காவல்துறையினர்கூட தெரிந்தோ தெரியாமலோ தோழர் தமிழரசன் ஒரு சிறந்த 'மனிதாபிமானி' என்கிற வகையில்தான் அற-மன்றத்தில் அறிக்கை அளித்துள்ளார்கள் எனக் காவலர் சான்றைச் சுட்டுகிருர்கள். தனியாள், பழி வாங்கல் என்பதும் பொறுந்தவில்லை. இனிக் கருவியேந்திய போராட்டத்தைப் பற்றிய திரு. அமிழ்தனின் கருத்தைக் காண்போம்.

### போராட்டம் சீர்குலேய அழித்தொழிப்பா?

தந்தை பெரியார் புரட்சியைப் பற்றிக் கூறும் போது "வன்முறை (பலாத்கார)ச் செயல்களில் இறங்காவிட்டாலும், அழிவு (நாச)வேலையிலாவது இறங்காவிட்டால் எப்படி மாறுதலைக் காண முடியும்?" எனக் கேட்கிருர். (விடுதலை 27-1-1970). கருவியேந்திய போராட்டம் நிகழ்ந்தால் அதில் அழிவுகளும் நிகழ்வது இயல்பே. ஆட்சியாளர்கள் அடக்குமுறையை ஏவும்போது அதனைப் புரட்சி-யாளர்கள் எதிர்க்கவே செய்வர். அப்போது சில அழிவுகள் நிகழத்தானே செய்யும். இதைத் தவறு எனக் கூறுவதே தவருகும். போராட்டத்தின் விளைவுகளை அறியாதாரின் கூற்று அப்படியாளுல் தமிழீழப் போராட்டத்தில் மக்கள் அழிக்கப் படு-வதும் சரிதானே என்ற வழக்கிற்கு வந்துவிடக் கூடாது. ஏனெனில் அங்கு உரிமை மீட்புப் போராட்டத்தை முன்னெடுத்துச் செயல்படுத்தும் விடுதலைப் புலிகளையும், மக்களையும் பிரிப்பதற்கு மக்களை அழிப்பதையே முகாமையாகச் சிங்களவப் படைகளும், இந்திய அமைதிப் படையும் செயல்-படுத்துகின்றன. கரணியம், அங்கு மக்களும் விடுதலைப் புலிகளும் சேர்நதே போராட்டத்தை நடத்துகின்றனர். இதில் மக்களைப் புரட்சியாளர்-களை விட்டுப் பிரிப்பதற்கு, மக்களைத் துன்புறுத்திப் போராட்டத்தில் ஒரு வெறுப்பை உண்டாக்கித் தமிழீழத்தைப் பிரிததெடுக்கும் முயற்சியை முறி-யடிக்க, மக்களை ஏவி விடவே, மக்களை அங்குத் துன்புறுத்திக் கற்பழித்து மக்களை அழிக்கும் செயல்களை இந்திய அமைதிப் படை செயல் படுத்துகிறது. இதனை இந்தியத் தலைமையமைச்சர் இலங்கை பிரிக்கப்படுவது தமக்குக் கவலை தரு-கிறது எனக் கூறுவதிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம். இலங்கைக் குடியரசுத் தலைவரும் "இந்திய அமைதிப் படை வந்த நோக்கம் வேறு, இப்போது இந்தியப் படை மக்களேயே அழிக்கிறது; விடுதலைப் புலிகளை அடக்க முடியவில்லை. எனவே இந்திய அமைதிப் படையே வெளியேறு" எனக் கூறி விட்டார்.

எனவே அங்கு மக்களும் போராளிகளோடு சேர்ந்து உரிமை மீட்பிற்காகப் போராடுவதால் மக்கள் அழிக்கப்படுகிருர்கள். தமிழக விடுதலைப் போராளிகள் மக்களை இந்தியாவின் வல்லாளுமை-யிலிருந்து மீட்டெடுக்கவே கருவி ஏந்தும் தொடக்க நிகழ்ச்சியைத் தொடங்கினுர்கள். அதுவே குடமுருட்டி, அரியலூர், நேரு சிலை, கொடைக்-கானல் — குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகள் ஆகிய நிகழ்ச்சிகளில் மக்கள் மிகுதியாகத் தாக்கப்பட-வில்லை, இதை உழைக்கும் மக்களுக்கு எதிரானது எனக் கருத்துக் கூறுவதானது, தமிழ் நாடு தனி-யாவதை விரும்பாத கூற்ருகும்.

### கருவிப்போர் எத்தகைதாய் இருத்தல் வேண்டும்?

திரு. அமிழ்தன் "புரட்சிக் கருவிப் போரை உருக்குலையாத ஒழுங்கமைந்த கட்டுப்பாட்டின் மூலமே புரட்சியை உருவாக்க முடியும், செயல் படுத்தவும் முடியும்" என்கிருர். போர் உருக்குலை-யாத ஒழுங்கு முறையில் அமைதல் வேண்டும் என்பது சரியே. ஆனல் குண்டு வெடிப்புகள் தனித்தமிழ் நாட்டு உரிமைப் போராட்ட வீரர்களில் தனிப் போராட்டப் படை வீரர்களால் நிகழ்த்த பட்டவையன்று. போராட்டத்திற்காகப் பயிற்சி பெற்றவர்களும் இக் குண்டு வெடிப்புகளை நிகழ்த்த-வில்லை. தமிழகத்தில் எந்த இயக்கமும் கருவிப் போராட்டப் பயிற்சியை யாருக்கும் அளிக்கவும் இல்லை. அம்முயற்சியை எவரும் மேற்கொள்ளவு-மில்லை. நடுவண் அரசு தமிழ்நாட்டிற்குச் செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்யாமல் அதிகாரச் செருக்கில் அடக்கி ஆள நினைத்ததின் விளைவால், இளைஞர்கள் தங்களுடைய வலிமையை நாட்டின் முன்னேற்றத்திற்குச் செலவிட முடியாத ஒரு சூழ்நிலையில், தன் தாய் நாட்டை அயலவன் போல ஆளுவதால் பல முன்னேற்றத் தடைகளை நீக்குவ-தற்காக அடிமை வாழ்வின் பிடியிலிருந்து விலக்-கிக்கொள்ள நினைக்கிருர்கள். இந்த எண்ணங்களை ஆளும் இனத்திற்கு அறிவுறுத்த எடுத்துக் கொண்ட ஒரு சிறு முயற்சியே இக் குண்டு வெடிப்பு. இந்தத் தொடக்க அறிவிப்பை அமிழ்தன் அவர்கள் போராட்டமாகக் கருதியதால், இதைத்-தான் தோன்றித்தனமானது என்று குறை கூறு-கிருர். போராட்டத்திற்காகப் படை அமைத்துப் பயிற்சி நிலைக்கு வந்து விட்டால் ஒழுங்கமைப்புகள் தாமாகவே வீரர்களுக்குக் கற்பிக்கப்பட்டு விடும். தொடக்க நிலைத் தவற்றைச் சுட்டிக் காட்டித் தகுந்த வழிகளைக் கூறுவதை விட்டு விட்டுப்

Scanned with CamScanner

போராட்டமே தவறு என்பது போராட்டத்தின் வளர்ச்சி முறையை அறியாத குறையாகும். எனவே போராட்டத்தின்படிநிலைகளைப் பற்றிப் பெருஞ்சித்திரனுர் கூறும் அறிவுரைகளை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(த.நி. 89) **''விடுதலை உரிமைப் போராட்டம் தேவை என்று உணர்வது முதல்படி நிலை; அதற்குரிய வீரர்களை ஒருங்கு திரட்டுவது இரண்டாம்படிநிலை. அவர்களை ஓர் இயக்கமாகக் கட்டியமைத்துப் பயிற்சி செய்விப்பது மூன்றும்படிநிலை. அவர்களைக் கொண்டு நேரடியாகவோ, கொரில்லா முறையிலோ போராடுவது நான்காம்படிநிலை. இறுதியாக அப்போராட்டத்தில் வென்றெடுப்பது ஐந்தாம் படி நிலை. மொத்தத்தில் இன, நில உரிமைப் போராட்டங்களைத் தொடங்குவதும் அவற்றை வழி நடத்திச் செல்லுவதும், இவ்வுலகில் செயற்கரிய செயல்களாகும். இச்செயல்களைக் குறைத்து மதிப்பிடுவாரும் குறை கூறித்திறனுய்வு செய்வாரும் வீரமற்ற கோழைகளாகவும், எதிரிகளாகவுமே இருக்க முடியும்''** எனக்கூறும் பாவலரேறு அவர்களின் வயிர மொழியை மனத்திற்கொள்ளல் நல்லது.

திரு. அமிழ்தன் காரல் மார்க்சு, இலெனின் போன்றவர்களின் கூற்றுகளை மூலமாகக் காட்டிக் குண்டு வெடிப்பின் மூலம் நடந்த தொடக்கநிலைப் போராட்டத்தைக் குறைத்து மதிப்பிடுகிருர். வள்ளுவப் பேராசானைவிட அவர்கள் எதுவும் பெரிதாகக் கூறிவிடவில்லை. அரசியலைப் பேச வந்த அப்பேராசான்,

''சிதை விடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு (கு. 597)''

'போர்க்களத்தில் போரிடும் களிறு அம்புபட்டுப் புண் பட்டாலும் தளராது பெருமையை நிலைக்க வைக்கும்; அதுபோல ஊக்கம் உடையார் தாம்கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்த விடத்தும் தளராது பெருமையை நிலை நிறுத்துவர்' — என்பது அக்குறளுரை. போராட்டத்தின் வெற்றி தோல்வியைச் சிந்திப்பவன் வீரனுகான். செய்ய வேண்டிய வினையைச் செய்யாமல் இருத்தலே குறையாகும். ஆதலால் வினையில் ஊக்கமும் முயற்சியும் எத்தகையது என்பதையே கணக்கிட வேண்டும். திருவள்ளுவர் கூறும் அறிவுரையை ஓர்க.

''வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு (கு. 612)''

வினைச்செய்யாக் குறையை நீக்குக.

***தமிழக விடுதலை- தனிநாட்டுக் கோரிக்கையில் பாட்டாளி- முதலாளி குழப்பம்:***

திரு. அமிழ்தன் தமிழக விடுதலை—தனிநாட்டுக் கோரிக்கைகளில் முதலாளி—பாட்டாளி வேறுபாடுகளைக் கொண்டு குழப்புகிருர். ஆட்சியாளர்களின் வல்லாளுமை தோன்றி விட்டால் ஆளுபவரை முதலாளியாகவே கொள்ள முடியும். இவர்களை எதிர்த்துப் பாட்டாளிகள்தாம் கிளர்ந்தெழுவர். அதைத்தான் தமிழ்நாடு விடுதலைப் படை வெளிப்படுத்திய அறிக்கைச் சுவரொட்டிகளில் தமிழ்நாட்டைப் பாட்டாளிகள் தலைமையில் விடுதலை செய்வோம் என அறிவித்திருந்தனர். அதனரசியல் தலைமையாகிய மார்க்சிய—இலெனினிய அழைப்புக் குழு தமிழ் நாட்டைத் தனிநாடாக்குவதே தமது கொள்கை இலக்கு என அறிவித்துள்ளது எனக் கட்டுரை வளர்கிறது. ஒரு நாட்டிற்கு விடுதலை வேண்டும் எனப் போரிடும் போது, பாட்டாளி—முதலாளி, மேல்சாதி—கீழ்ச்சாதி, உயர்ந்த சமயம்—தாழ்ந்த சமயம் போன்ற வேற்றுமை உணர்வோடு போராட்டத்தைத் தொடங்கினுல், ஒரு கூட்டம் விடுதலை வேண்டும் என்று சொன்னுல், இன்னொரு கூட்டம் வேண்டாமென்று போராட்டத்தைக் கீழிறக்கஞ் செய்து விடும்.

எனவே விடுதலை அல்லது தனிநாட்டு உரிமைப் போராட்டத்தில் வேற்றுமை உணர்வை வெட்டிச் சாய்த்து விட வேண்டும். 'தனிநாடாக்குதல் பாட்டாளியத்திற்கு எதிரானது; முதலாளிய முழக்கத்தை உள்ளடககியது' என்று கூறுவது, ஒன்று சேர்ந்து போராடும் ஒரு பெரும் ஆற்றலைப் பிரித்து, ஆட்சியாளரின் பிரித்தாளும சூழ்ச்சிற்குத் துணை நிற்பதாகும். அதனுலேயே உ. த மு. க. உயர்ந்த கொள்கைகள் 'சாதியற்றச் சமய வேறுபாடற்றச் சமநிலைக் குமுகாயம்' எனவும், 'தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்' எனவும், வேற்றுமை உணர்வற்ற ஒருமைத் தமிழகமாக இருக்கும் என அறிவித்துள்ளது.

திரு. அமிழ்தன் 'தனி நாடாக்கும் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் இக்கொள்கை உலக அளவில் தமிழர்களைத் தனிமைப் படுத்துவதை மேற்கொள்கிறது. அது தமிழர்களைப் பிற இன மக்களுக்கு எதிரிகளாக்கி நிறுத்துவதில் போய் முடிகிறது' என்று அச்சமூட்டுகிருர். உலக நாடுகளில் எத்தனையோ குட்டி நாடுகள் பிரிந்து தனி நாடுகளாகி விட்டன. இந்தியாவிலும் பர்மா, பாக்கித்தான், வங்காளதேசம்—போன்ற நாடுகள் பிரிந்து விட்டன. இன்னும் பஞ்சாப், அசாம், மிசோரம் போன்ற மாநிலங்கள் தனித்து வாழப் போராடிக் கொண்டிருக்கின்றன. ஓரினம் இன்னோர் இனத்தை மொழியாலும், பண்பாட்டாலும் அழுத்துவதாலேயே பிரிவினை உணர்வு வளர்ந்து விடுகிறது. மேலும் தமிழ்நாடு தனி நாடாகத் தனியரசாக, தனிக் கொடி, தனிப் படை கொண்டு வாழ்ந்த நாடு வரலாற்று அடிப்படையில் தனியாட்சி நடத்திப் புகழ்பெற்ற நாடு என்பதைத்

Scanned with CamScanner

# வல்வெட்டித்துறைப் படுகொலை!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

ஓர் இனம் மற்றோரினத்தின்மேல் கொண்டுள்ள காழ்ப்புணர்வு, தக்க சமயம் வாய்க்குங்கால் படுகொலைகளாக (massacres) உருப்பெறுமென்பதை மாந்த வரலாற்றைப் படிப்போர் அறிவார். இரண்டாம் உலகப் போரின்போது சப்பானியப்படை சீன மக்கள் மீது அவிழ்த்துவிட்ட படுகொலைகள், இரண்டாம் உலகப் போரின்போது செர்மானியப் படைகள் உருசியாவிலும், போலந்து நாட்டிலும் (Russia and Poland) நடத்திய படுகொலைகள், வங்காளதேச (Bangladesh) விடுதலைப் போரின் போது மேற்குப் பாக்கிசுத்தானைய படைகள் வங்காள தேசத்தில் நடத்திய படுகொலைகள் முதலியன இவற்றுள் அடங்கும்.

கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக, இத்தகைய படுகொலைகள் பல வட இந்தியப் படைகளால் ஈழத்தில் வாழுகின்ற தமிழ் இனத்தவர் மீது அவிழ்த்து விடப்பட்டுள்ளன. இப் படுகொலைகளை உலகு அறியாவண்ணம், வட இந்திய அரசு மூடி மறைத்து வந்துள்ளது. தமக்கு உகந்த சில இந்தியச் செய்தியாளர்கள் (News - reporters) தவிர பிறரை ஈழத்தில் நுழைய விடாமல் தடுப்பதும், தம் கட்டுப்பாட்டுக்குட்பட்ட இந்திய வானொலி, வானொளி (radio, television) வழியாகப் பொய்ச் செய்திகளைப் பரப்புவதுமாக வட இந்தியப் படைகளின் செய்திகளைப் பரப்புவதுமாக வட இந்தியப் படைகளின் அட்டூழியங்கள் உலகின் கண்களுக்கும், தமிழகத் தமிழ் மக்களின் கண்களுக்கும் மறைக்கப்பட்டன. ஆனால், அண்மையில் (1989-ஆம் ஆண்டு ஆகத்துத் திங்களில்) வட இந்தியப் படைகள் வல்வெட்டித்துறையில் நடத்திய படுகொலைகளை வெளிநாட்டுத் தாளிகையாளர்கள் சிலர் அறிந்து, அதனை உலகுக்கு 'அம்பல'ப்படுத்தியுள்ளார்கள். இச் செய்திகள் வெளிப்படையானவை. "வல்வெட்டித் துறையில் தமிழ்ப் பொது மக்கள் கொல்லப்பட்டதற்கு நாங்கள் காரணமன்று; எங்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகட்கும் நடந்த சண்டையின் இடையே அகப்பட்டுச் சில பொது மக்கள் செத்தார்கள்" என்ற பொய்யை வட இந்தியப் படை பரப்பி வருகிறது. உண்மையில் நடந்தது என்ன? வட இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகட்கும் நடந்த சண்டையின் இடையே அகப்பட்டுத் தமிழ்ப் பொது மக்கள் செத்தார்களா? அல்லது, வட இந்தியப் படை தமிழ்ப் பொது மக்களை நேரடியாகப் படுகொலை செய்ததா?

நடந்த நிகழ்ச்சிகள் குறித்துப் பலரைக் கண்டு பேசி, உண்மைகளை ஆய்ந்து, நடுநிலையான செய்தியை இங்கிலாந்து நாட்டிலிருந்து வெளிவரும் கார்டியன் (Guardian) என்ற ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ளது. அவ்விதழில் வெளி வந்த செய்திகள் சிலவற்றின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளன:

1. "இந்தியப் படை வல்வெட்டித் துறையில் நடந்த படுகொலையை மூடி மறைக்க முயன்றது. ஆனால் வல்வெட்டித் துறையில் நடந்த படுகொலையைப் பற்றிய நம்பகமான, நடுநிலைமையான செய்திகள் இப்போது கிடைத்துள்ளன."
2. "படுகொலை பற்றிய செய்திகள் வெளியே தெரியக் கூடாதென்பதற்காக, செய்தியாளர்களை (news reporters) மட்டுமல்லாமல், மருத்துவர்களையும் (doctors) கூட வல்வெட்டித் துறைக்கு வர விடாமல் இந்தியப் படை தடுத்துள்ளது."
3. "சிறுவர் சிறுமியர், பெண்கள், முதியோர் உட்பட, வல்வெட்டித்துறை நகர் மக்கள் பலரைச் சுவர்கள் முன்னால் நிற்க வைத்துச் சுட்டுக்கொன்றது இந்தியப் படை."

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

---

(முன பக்கத் தொடர்ச்சி)

திரு. அமிழ்தன் மறந்துவிட்டு இப்படி எழுதுகிறார். பாச்சி பாச்சி என்றழும் குழந்தைக்குப் பூச்சி பூச்சி என்று கூறி அச்சமூட்ட வேண்டாம். இக்காலக் குழந்தை பூச்சியைப் பிடித்துக் கழுத்தைத் திருகி எறிந்து விடும். திரு. அமிழ்தனின் கூற்று தமிழீழம் கேட்டுப் போராடும் போராட்ட வீரர்களையே கொச்சைப்படுத்துகிறது. ஓரினத்தை அழுத்தி வாழும் வேறோர் இனம் *'விடுதலை தா'* எனறவுடன தந்து விடாது. போராடியே உயிர்க்கொடை ஈந்த்த பெற முடியும. *தமிழக விடுதலை* என்ற கொள்கைக்கும் *தமிழ்நாட்டைத் தனி நாடாக்கும் தனித் தமிழ்நாடு* என்னும் கொள்கைக்கும் ஆழமான வேறுபாடுகள் ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை. தமிழ்நாடு இந்தியாவிலிருந்து விடுதலையானவுடன் தனி நாடாகி விடும். தமிழகத்திலுள்ள எல்லா இனமும் வாழும்.

உலக ஒன்றிய நாடுகளின் அவைச் சட்டங் கூட திரு. அமிழ்தனின் கூற்றை ஏற்காது. தனி நாடானால் தனிக் கொடி அங்கு பறக்கும். எல்லா இனத்தவரையும் சோறு போட்டுக் காத்தவன் தமிழன். எனவே பகையாக வாழ மாட்டான். பண்போடு பழகுவான். என்பதைத் திரு அமிழ்தன் உணர்ந்து கொள்ள வேண்டும்.

***எனவே, தமிழர்களே! தமிழ்நாட்டு உரிமையைப் போராடிப் பெறுங்கள்.*** (முற்றும்.)

அலைவரிசை 1-இல் தமிழ் மட்டும் ஒலிபரப்பக் கோரி

# தமிழ்நாடு முழுவதும் வானொலிப் போராட்டம்!

## நடுவண் அரசுக்கு கி. ஆ. பெ. கடிதம்!!

தமிழ் அறிஞரும், முத்தமிழ்க் காவலருமான கி.ஆ.பெ. விசுவநாதம், திருச்சி வானொலி நிலைய இயக்குநருக்கு ஒரு கடிதம் அனுப்பி உள்ளார். அதில் கூறி இருப்பதாவது:-

### தமிழ் எதிர்ப்பு வேலைகள்!

தங்களிடம் எவ்வளவோ நேரில் சொல்லியும், எழுதியும் தமிழ்நாட்டில் வானொலி நிலையங்களில் தமிழுக்கு இடம் தராமல், தமிழ் எதிர்ப்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தமிழ் அல்லாத பல மாநில மொழிகள் ஒலிபரப்பப்படுகின்றன. குறிப்பிட்ட 21-10-89கூட திருவேங்கடவனைப் பற்றி ஆழ்வார்கள் பாடிய தமிழ் பக்திப் பாடல்கள் இருக்க, அவற்றை ஒலிபரப்ப விருப்பம் இல்லாமல், தமிழ் மக்களுக்குப் புரியாத-தெரியாத ஒரு மொழியில் அரைமணிநேரம் ஒலி பரப்பி, மக்கள் நேரத்தை வீணுக்கிக் கொண்டு இருக்கிறீர்கள். இந்தத் தமிழ் ஒழிப்புச் செய்திகள் தமிழ் மக்கள் உள்ளத்தை வருத்துகிறது.

### ஒழிக்க கூடாது!

எங்களுக்கு எந்த மொழி மீதும் வெறுப்பு இல்லை. இந்தி, சமசுக்கிருதம் உள்பட எல்லா மொழிகளையும் ஒலிபரப்பலாம். ஆனால் தமிழை, தமிழ் இசையை, தமிழ் இலக்கியத்தை மறைத்து, ஒழிக்கக் கூடாது.

கடைசி வேண்டுகோளாகக் குறைந்தபக்கக் கோரிக்கை ஒன்றை இன்று தங்களுக்கும் நடுவண் அரசினருக்கும் எழுதி இருக்கிறோம். "அ'து அலைவரிசை ஒன்றில் தமிழ்மொழி வழி மட்டுமே ஒலிபரப்பி அலைவரிசை 2-இல் இந்தி, சமசுக்கிருதம், ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, அசாம், பஞ்சாபி ஆகிய எல்லா மொழிகளிலும் ஒலிபரப்ப வேண்டும்." என்பதுதான். இது தமிழகத்தில் உள்ள எல்லா மொழியினருக்கும் மகிழ்ச்சியைத் தரும்.

### தமிழ் எங்கள் பேச்சு!

இந்தக் குறைந்த பக்கக் கோரிக்கையைக் கூட நிறைவேற்ற தங்களுக்கும், நடுவண் அரசுக்கும் விருப்பம் இல்லை என்றால் தாங்களும் நடுவண் அரசினரும் தமிழை ஒழிக்கத் தொடங்கி விட்டீர்கள் என்று உறுதியாகிவிடும். நாங்கள் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. ஏன் என்றால் "*தமிழ் எங்கள் மூச்சு-தமிழ் எங்கள் உயிர்.*"

### வானொலிப் போராட்டம்!

தாங்கள் இந்தச் சிறு கோரிக்கையையாவது ஏற்றுக் கொள்வதாக இன்று முதல் 15 நாள்களுக்குள் தெரிவித்தாக வேண்டும். இல்லையேல் தமிழ் நாட்டில் மறுபடியும் வானொலிப் போராட்டம் நடைபெறும் என்பதையும், இது தங்களுக்கும் தங்கள் நிலையத்தாருக்கும், நடுவில் அரசில் உள்ளவர்களுக்கும் நலம் தராது என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

(வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகள் புறக்கணிக்கப்படுவதைக் கண்டித்து 30 ஆண்டுகளுக்கு முன் கடந்த 1959-ஆம் ஆண்டு வானொலிப் போராட்டம் நடந்தது.)

---

# தமிழ்நாட்டுப் பங்கீட்டுக் கடைகளில் அரிசி, மண்ணெய், சருக்கரை இல்லை!

## தமிழ்நாட்டில் விளைந்த அரிசி, சருக்கரை எங்கே? தமிழ்நாட்டில் கிடைக்கிற கன்னெய் எங்கே?

O தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு 50 இலக்கம் கல்லெடை(டன்) நெல் விளைகிறது. தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் ஆண்டு முழுக்க வயிறாரச் சாப்பிடத் தேவையான நெல் 40 இலக்கம் கல்லெடை (டன்) மட்டுமே. ஆக, ***தமிழ்நாட்டில் ஏன் அரிசிப் பஞ்சம்?***

விளைச்சலில் பங்கு வரி ('லெவி')-என்கிற பெயரில் தில்லி நடுவண் அரசு 25 இலக்கம் கல்லெடை (டன்னு)க்கும் மேலாக நெல்லைக் கொள்ளை அடித்துச் சென்று விடுகிறது. அ'தோடு மட்டும் அல்லாமல், ஏதோ ஆண்டொன்றுக்கு 40 ஆயிரம் கல்லெடை (டன்), என்றும் இரவு (பிச்சை) போடுகிறது. நாமும் 40 ஆயிரம் கல்லெடை போதாது-

ஆளுநர் ஆட்சியில் கொடுத்த 80 ஆயிரம் கல்லெடை கொடு என்று இரந்து கேட்கிறோம்.

O தமிழ்நாட்டில் மட்டும் கூட்டுறவுத் துறையில் 12 சருக்கரை ஆலைகளும், பொதுத் துறையில் 3 சருக்கரை ஆலைகளும், தனியார் துறையில் 12 சருக்கரை ஆலைகளும்—ஆக மொத்தம் 27 சருக்கரை ஆலைகளும் உள்ளன. ஒவ்வொரு சருக்கரை ஆலையிலும் ஆண்டொன்றுக்குப் பல இலக்கம் கல்லெடை சருக்கரை உருவாகிறது.

—ஆக இருபத்து ஏழு சருக்கரை ஆலைகளில் இருந்தும், ஏறத்தாழ ஒரு கோடி இலக்கம் கல்லெடை சருக்கரை கிடைக்கிறது. ஆனால் சருக்கரை முழுவதையும் தில்லிக் கொள்ளையர்கள் தங்களுக்குச் சொந்தமெனக் கொள்ளை அடித்துச் செல்கின்றனர். செல்வதோடு-தமிழ்நாட்டிற்குச் சில ஆயிரக்கணக்கான கல்லெடை சருக்கரை மட்டும் இரவு (பிச்சை) போல் போடுகின்றனர்.

O இன்றைக்கு இந்தியாவிலேயே கன்னெய் (பெட்ரோல்) அதிகமாகக் கிடைப்பது தமிழ்நாட்டில்தான். ஒவ்வொரு நாளும் பல ஆயிரம் கல்லெடைகளுக்கும் மேலாக நரிமணத்தில் முதல் தரமான கன்னெய் கிடைக்கிறது.

—இருந்தும் தமிழ்நாட்டுப் பங்கீட்டுக் (ரேஷன்) கடைகளில் மண்ணெயும், தமிழ்நாட்டில் கன்னெயும் (பெட்ரோலும்) மக்களுக்கு இல்லை. அவற்றை எல்லாம் தில்லி அரசுக் கொள்ளையர்கள் கொள்ளை அடித்துக் கொண்டு போகின்றனர்.

ஆக, அரிசியும், சருக்கரையும், மண்ணெயும் ஏராளமாய் இருந்தும்-உருவாகியும் நாம் பஞ்சப் பட்டினியாய்த்தான் அலைகிறோம்.

நாம் உழைத்து ஈட்டிய நம் நாட்டுச் செல்வத்தை இன்னொருவன் ஒருமை ஆட்சி என்னும் பெயரில் அடித்துச் செல்லவும், அவற்றை வெளிநாடுகளுக்குப் பத்துக்கு, ஒன்று, இரண்டு உருபாவாக மலிவு விலையில் அனுப்பி, இவர்கள் அந்நாடுகளுக்குப் போய்க் கொம்மாளம் அடிக்கவும்—நாம் ஏன் இங்கு பஞ்சைப்பராரிகளாய் இருக்க வேண்டும்.

அக்கொள்ளையர்களை எதிர்த்து விலக்கி விட்டு நம் உரிமை வாழ்க்கைக்காகவும் நம் நாட்டு விளைவுப் பொருள்களை நாமே முழுமையாகப் பயன் படுத்தவும் நம் தமிழ்நாட்டை ஆள்வதற்கும் நாம் போராட வேண்டாவா? அதற்கு நாம் அனைவரும் ஒன்றாக இணைந்தால் அன்றோ?... தமிழ்நாட்டு உழவர்களே! தொழிலாளர்களே! இளைஞர்களே! நாம் சிந்திப்போம்! செயல்படுவோம்!

**(தமிழ்நாடு இளைஞர் பேரவை, தமிழ்நாடு மாணவர் பேரவை** இணைந்து வெளியிட்ட அறிக்கை.)

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

4. "சிறுவர் சிறுமியர், பெண்கள், முதியோர் உட்பட, நகர மக்கள் பலரைத் தங்கள் முகம் மண்ணில் படுமாறு படுக்க வைத்து, அவர்களை முதுகில் சுட்டுக் கொன்றது இந்தியப்படை."

5. "மொத்தம் 51 நகர் மக்கள் கொல்லப்பட்டார்கள். அதில் ஆறு பெண்களும், ஏழு சிறுவர் சிறுமியரும் உட்படுவர். மேலும் எழுபது நகர் மக்கள் காயமடைந்தனர்."

6. "123 வீடுகளும், 43 கடைகளும், நான்கு திரைப்பட அரங்குகளும், ஒரு நூலகமும், 69 வண்டிகளும், 12 மீன் பிடிக்கும் படகுகளும், 129 மீன் பிடிக்கும் வலைகளும் இந்தியப் படையால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன."

7. "இந்தியப் படை பொது மக்களைக் கொல்வதையும், வீடுகட்குத் தீ வைத்து எரிப்பதையும் கண்ட நகர் மக்கள் தம் வீடுகளை விட்டு ஓடி விட்டார்கள். நகர் வெறிச்சிட்டுக்கிடக்கிறது."

தமிழ்ப் பொது மக்கள் இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகட்கும் நடந்த சண்டைக்கு இடையே அகப்பட்டுச் செத்தார்கள் என்ற இந்தியப் படையின் கூற்று எவ்வளவு பொய் என்பதை மேற்கண்ட செய்திகள் காட்டுகின்றன. இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகட்கும் நடந்த சண்டை முடிந்த பிறகு (அச் சண்டையில் ஏழு இந்தியப் படையினரும், ஐந்து விடுதலைப் புலிகளும் இறந்து விட்டதாகத் தெரிகிறது), தாங்கள் விடுதலைப் புலிகள் அனைவரையும் கொல்லவியலாத ஆத்திரத்தாலும், ஈழத் தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள காழ்ப்புணர்வாலும், நகரிலுள்ள ஒன்றுமறியாத் தமிழ் மக்களைப் (பெண்கள், சிறுவர் சிறுமியர், முதியோர் உட்பட) பிடித்துச் சுவர் முன்னே நிறுத்தியும், தரையில் படுக்க வைத்துச் சுட்டுக் கொன்று, தங்களது கொலை வெறியைத் தணித்துள்ளார்கள், இந்தியப் படையினர். (இவர்கள் பெறும் சம்பளத்தின் ஒரு பகுதி தமிழகத் தமிழ் மக்கள் இந்தியத் தில்லியரசுக்குச் செலுத்தும் வரிப்பணத்திலிருந்து வருகிறது என்பதை மறந்துவிடலாகாது.)

வல்வெட்டித் துறையில் நடந்தது போன்ற படுகொலைகள் பல, ஈழமெங்கும் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இப் படுகொலைகள் பற்றிய விளக்கங்கள் அவ்வப்போது வெளிவந்தாலும், இந்திய அரசு அவற்றை மூடி மறைத்து வந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில், இந்தியப் படை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்களைக் கொன்றுள்ளது. பல நூறு தமிழ்ப் பெண்களைக் கற்பழித்துள்ளது. பல கோடி உருபா மதிப்புள்ள தமிழர் தம் சொத்துகளை அழித்துள்ளது அல்லது களவாடியுள்ளது. உலகம் யாண்டும் வாழும் தமிழ் மக்கள் இவ்வட்டுழியங்களை மறந்து விடலாகாது.

O

# பறம்பை அறிவன் பக்கம்!

## 1. குடிக்கும் கஞ்சியிலுமா சாதி?

அவர் கரிநெய் (தார்)ச்சாலை போடும் கூலி. அப்போது அவர்க்கு அகவை 23. சாதியில் தேவர். இந்தப் பெருமை அவர்க்குச் சோறு போடவில்லை. கஞ்சிக்கு வழி பாடுபட்டால்தான். வேலைக்கு வந்த பிறகு பன்னுப்பறை என்று பார்த்தால் முடியுமா? எல்லாரும் கரிநெய் (தார்) உருகும் சாலையில் 'வெயர்வை ஆறாய் ஓட'உழைத்துக் கொண்டிருந்தார்கள். அவருடைய உறவுக்காரர் நம் தோழர். இவர் கறுப்புச் சட்டைக்காரர். அவரும் இவரும் சிந்தனையைப் பொறுத்தவரை தோட்டம் தொலைதான்!

ஆனாலும் இவர் உறவையும் விடாமல், சாதியையும் பார்க்காமல் பழகிக் கொண்டிருப்பார். கஞ்சி குடிப்பது என்னவோ, உறவுக்காரர்களோடு மட்டும்தான்!

அன்று 'கல்லக்குடி வீரர் ஆகக் கலைஞர்' களம் புகும் நேரம். அதே நேரம், இவர், 'தார்'ச்சாலைக் கூலி வேலையையும் பொருட்படுத்தாமல், மானாமதுரையில் ஓடிவரும் தொடர் வண்டிக்கு எதிராகக் "காவலர் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு" ஓடினார்; தண்டவாளத்தில் குறுக்கே விழுந்தார். 'எதிர்பார்த்ததுபோல்' தொடர் வண்டி ஓட்டுநர் வண்டியைச் சடக்கென்று நிறுத்தி விட்டார். இவர் தப்பினார்!

இப்படி வேலையை விட்டு விட்டுப் போராட்டத்தில் ஈடுபட்ட இவர்க்கு, சாலைப் பணி ஒப்பந்தக்காரர் 'மூன்று நாள்' வரையும் அலைய விட்டுப் பிறகே வேலை தந்தார். இவர் அப்படி இருந்தும் 'எல்லாரையும் தட்டிக் கொடுத்து'த் தம் கூட வேலை செய்யும் கூலிகளை ஒற்றுமையாக வைத்து ஒப்பந்தக்காரர்க்கு 'அதிக உழைப்பை' ஈட்டித் தந்தவர் என்பதை எல்லாரும் அறிவர்! என்றாலும் அந்த ஒப்பந்தக்காரர்க்குத் தி-க, தி.மு.க. என்றால் வயிற்றைக் கலக்கும்! இப்போது எல்லாம் 'அப்படி இல்லை' என்றுதான் கூற வேண்டும்!

இவர் இப்படி என்றால், அவர், கூட வேலை பார்த்த தன்மை ஒத்த கூலிக்காரர் 'பறையன்' என்றறியாமல் இருந்து வந்தார். அவரும் (அந்தப் பறையன்) தம்மை ஒரு 'பண்டாரம்' என்று கூறி 'ஒளிந்து'[கொண்டார்.

ஒருநாள் அவர், சாப்பிட்டுக் கொண்டிருந்த போது கூடச் சாப்பிட்டுக் கொண்டிருந்த 'பண்டாரம்' 'அந்தப் பறையனையா தண்ணீர் கொண்டுவரச் சொன்னீர்கள்' என்றதும் அவர் சாப்பிட்ட சாப்பாடு 'ஒவ்வாமல்' போய் வாந்தியெடுத்து விட்டாராம்! இப்படி ஒரு போராட்டம் 'சாதி எதிர்ப்பு' நடந்து கொண்டிருந்த அன்று போனது!

ஆனால், 'இன்றும்' தொடர்கிறதே 'சாதிக் கலகம்' ஏன்?

பல்வேறு மாற்றங்கள் வந்து விட்டன என்கிறார்களே. இந்தச் 'சாதி இழவு' மட்டும் ஏன் கட்டு விடவில்லை?

சிந்திப்போம்! செயல்படுவோம்!

## 2. தேசிய இன ஒடுக்குமுறை!

இன்று (29-9-89)தான்! 'மாபெரும்' கருத்துப் பரப்பல் வழிநடை (பயணம்) என்று போட்டு ஒலி பெருக்கியில் முழங்கிக் கொண்டிருந்தார்கள்.

'போடோ' மக்கள் போராட்டம், 'பிரிவினை' குழப்பக் கும்பலின் சூழ்ச்சி என்றும் பேசினார்கள். எந்தப் போராட்டத்தையும் 'பிரிவினை' அமெரிக்கச் சூழ்ச்சி என்ற பார்வையோடு பேசுவது இ.பொ.க இ. பொ. க (மா) வேலையாகி விட்டது!

அவர்கள் வெளியிட்ட துண்டறிக்கை என்ன சொல்கிறது? அது கூறும் ஞாயங்களை எந்த அரசியல் மூலம் வென்றெடுக்கப் போகிறார்கள் என்பதுதான் கேள்வி!

இந்தியாவில் படித்து முடித்து வேலை வாய்ப்புக் கோரிப் பதிவு செய்துள்ளோர் எண்ணிக்கை 4 கோடி. கம்மப் பகுதிகளில் வேலை வாய்ப்பின்றி வாடுவோர் 7 கோடி.

இந்நிலையில், வேலை அமர்த்தத் தடைச் சட்டம் போட்டுப் பொதுத்துறை நிறுவனங்களில் ஆள் எடுப்பதை அரசு தடை செய்திருக்கிறது.

1,70,000 ஆலைகளுக்கு மேல் மூடிக் கிடக்கின்றன.

கல்வி நிறுவனங்கள் வணிக நிலையங்கள் ஆகி விட்டன. கம்மப் புறப் பள்ளிகள் பற்றிக் கவலைப்படாத நடுவணரசின் புதிய கல்விக் கொள்கை!

—என அத்துண்டறிக்கை வெளியிட்ட அனைந்திந்திய இளைஞர் பெருமன்றம், இந்திய மக்கள் நாயக இளைஞர் கழகம், இளைஞர் சனதா தளம் கூறுகின்றன.

'தேச ஒற்றுமை' பற்றிப் பேசும் இவர்கள் ஒற்றுமையாகக் குரல் கொடுக்கும் இந்தச் சிக்கல்களை 'இந்தியத் துணைக் கண்ட அளவில்' போராடித் தீர்க்க முடியும் என நம்புகிறார்கள் இவர்கள்!

ஆனால், தேசிய இன ஒடுக்கு முறையைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவதில் இவர்கள் சூரர்களாகவே உள்ளார்கள்.

நேருக்கு நேராகத்
தமிழகத்தில் உள்ளூரில்
நகரில் நடக்கும்
மேற்குறித்த கொடுமைகளுக்கு
முடிவுகட்ட ஏன் புள்ளி விளக்கம் தருவதில்லை?

Scanned with CamScanner

## 3. பொறுப்புகள்! ஏற்புகள்!

'தமிழகத்தில் சாதிக் கலவரம்'—நாம் தலை-குனிய வேண்டும். இதற்காகக் கல்வியாளர் மனத் துயரும் வருத்தமும் அடைகின்றனர். இந்த நிலைமைக்கான காரணங்களையும் அவற்றை அகற்ற அல்லது உரிய நடவடிக்கை எடுக்க அனைவரும் முயலதல் வேண்டும்!

அருப்புக் கோட்டையில் பள்ளிக் குழந்தைகள் பேருந்தின் மோதலால் இறந்து போன அவலம் கண்டு நெஞ்சம் கழன்று வீழ்ந்து கதறுகின்றது. மழைக்கஞ்சிக்குக் கையேந்திப் பள்ளி நேரத்தில் குழந்தைகள் வெளியேறியதற்கு ஆசிரியர்—தலைமையாசிரியர்—கல்விக்குழு உறுப்பினர் மட்டும் பொறுப்பாகி விடுவது சரிதானா?

அன்று, 'நிறைபழி கொல்யானை,...பறை-யறைந்தல்லது செல்லற்க' என்று எச்சரிக்கை செய்யாத ''அரசே தவறுடையது'' என்றனர். இன்று—அரசு, மக்களாட்சி என்ற பெயரில் தன்னைத் தப்ப வைத்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் ஆசிரியர் இயக்கங்கள் அரசு ஊழியர் அமைப்புகளின் பேரமைப்பு உள்ளது. இவர்களைப் பிரிக்கும் 'தனியார்' என்ற கல்வித் துறையாளரை ஒன்றிணைக்கப் போராடும் அமைப்புதாம் தனியார் பள்ளி ஆசிரியர் அலு-வலர் கழகம்—சங்கம் என்பவை! ஆன போதும் 'பேரமைப்பு', முன் கூட்டி அறிந்திருந்தும் 'தனியார் பள்ளி ஆசிரியர் அலுவலர் மாநாட்டு நாளன்றே, தனது 'மாவட்டந்தோறும் பேரணி' நிகழ்ச்சியை நடத்தத் திட்டமிட்டுள்ளது. அன்று (14-10-89) அரசு ஊழியர்—ஆசிரியர் பிரிந்து நிற்கச் சூழ்ச்சியாகி நிற்பதும் அரசு'தான் என-லாம்! என்கிறபோதும், இதற்குப் பலியாகும், 'பேரமைப்பின் தலைமைகள்' அரசின் கருவிகளாக மாறி விடுவது கண்கூடு!

இதனைக் குழு மனப் போக்கிலிருந்து நோக்-காமல், பரந்த பார்வையுடன் ஆழமாக எண்ணி, எதிர்காலத்தும் ஒற்றுமை தொடர அனைத்துத் தரப்பு இயக்ககாரர்களும் முயல்தல் வேண்டும்; முனைப்பாகச் செயல்படுதல் வேண்டும்!

'பெரியார் மணியம்மையார் பெயரில் மகளிர் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்' நிறுவப் போவதாக முதல்வர் பெரியாரின் 111-ஆவது பிறந்த நாள் விழாவில்—தஞ்சையில்—அறிவித்-துள்ளார்! இந்த அறிவிப்பு, முதல்வரின் பெண் கல்வி முன்னேற்றத்தில் உள்ள அக்கறையைக் காட்டலாம்! ஆயினும், சில வினாக்களைச் சிந்தனைக்-காக வைப்பது தவறில்லை என்றே கருதுகிறேன்...!

1. பெரியார், மணியம்மையார் உரிமையில் தலையிட்டவர் அல்லர். அவரையும் மணியம்மை-யாரையும் இணைத்துப் பார்ப்பதன் காரணம் யாது? 'மகளிர்' பல்கலைக் கழகம் என்பதாலா?

2. ஆண்-பெண், பால் வேறுபாடு கருதாமல் உடை பூணுவது பற்றிக் கூடப் பெரியார் சிந்தித்-துப் பேசியவர். அவ்வாறிருக்க 'மகளிர்'க்கெனத் தனித் தனிக் கல்வி நிறுவனமா என்ற வினா எழுவது இயல்புதானே?

3. பிற்பட்டவர், தாழ்த்தப்பட்டவர், மகளிர் என்ற பிரிவினை முன்னேற்றத்திற்கான' படிக்கற்-கள் என்று கொள்வது ஒருபுறம் இருக்க-அவர்களை 'மக்கள்' நிலைமையுடன், ஒன்றிணைந்து வாழ்வதற்-கான—பழகுதற்கான வாய்ப்புகளை மறைமுகமாகத் தடை செய்தல் கூடாதன்றோ? குமுகாயத்தின் முரண்பட்ட வளர்ச்சிகளால் ஏற்படும் சிக்கல்களை நீக்கவும், குறைக்கவும் முயல்வோம்; தவிர்ப்போம்' என்பது மேலும் பல புதிய சிக்கல்களையும் கோணல்களையும் திருகலுணர்வு (வக்கிரங்)களையும் ஏற்படுத்தாதா? சிந்திப்போம், செயலுக்காக! சிந்திப்போம்; சீர்மைக்காக! O

வெளியீடு: 'சிந்தனையாளர் மன்றம்'
பறம்புக்குடி—623707.

---

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு ஏற்பாடு செய்யாமல், மாணவர்கள் தமிழில் படிக்க எவ்வாறு முன்வருவர் என்பதை அரசும் பல்கலைக் கழகமும் சிந்திக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பொழுது, தமிழில் படிக்க மாணவர்கள் முன் வரவில்லை என்பது, தமிழ் மொழியை அழிக்க வேண்டும் என்று நினைப்பவர்களின் போலியான பொருளற்ற குற்றச்சாட்டு என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும்.)

இக் குழுக் கூட்டத்தில், ''கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மட்டுமின்றி, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற தொழிற் கல்லூரிகளிலும் தமிழ் பாட மொழி அறிமுகப் படுத்தப் பெற வேண்டும்'' என்று பர். விருத்தாசலம் (தஞ்சை) கோரினர்.

''தமிழ்ப் பாட மொழியை அறிமுகப் படுத்து-வதற்கு முன்பாக, அதற்கான அடிப்படைப் பணிகள் பலவற்றைச் செய்தாக வேண்டும்'' என்று தேசியக் கல்லூரிப் பேராசிரியர் கோ. அரங்கராசன் கூறினர்.

ஆனாலும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் அனைவருமே பார்ப்பனராக உள்ள கொடுமையால் தமிழ்ப்பாட மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது: கலைஞர் தலைமையில் உள்ள தமிழக அரசுதான் இதில் முழுக் கவனம் செலுத்த வேண்டும். பல்கலைக் கழகத்தின் பார்ப்பன ஆளுமையைக் மேலே உள்ள பட்டியலைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். O

Scanned with CamScanner

(இந்தியா இன்று—இதழ்க் கட்டுரை)

'மாறிவரும் பால் உணர்வுகள்' பற்றி 'இந்தியா இன்று' (INDIA TODAY) அட்டைப் படக்-கட்டுரை வெளியிட்டுள்ளது. இதனை 'பொறுப்பற்ற எழுத்து' என்பதா? 'இன்றைய அவலம்' குறித்து அறிவிப்பது குற்றமன்று என்பதா? மேல், கீழ், நடு மட்டம் எல்லாம் இப்படிச் சரிந்து வரும் பண்பாடு காரணமாகப் பாலுணர்வுச் சிந்தனை மேலோங்கி 'அதனைக் குற்றவுணர்வோடு' காண்பது குறைந்து வருவதை உணரலாம்!

'மறைவில் களித்திரு' பாவலரேறு பாலுறவு குறித்துச் சொல்லியுள்ளார். இன்று ஒரு தேடல் முயற்சியாகி உசாவுதல் பொருளாகி விட்டது. இதனை 'எந்த அளவு' சரியாக விளங்கிக் கொள்ளப் போகிறோமோ? சொல்லித் தெரிவதில்லை இந்தப் பாலுறவுக் கலை! இதையேன் இப்போது அலசிக் கொண்டிருத்தல் வேண்டும்! ஆயிரம் வேலைகள் வேறு வேறுண்டே எனலாம்! ஆனாலும் பாதிக்கு மேல் இந்தப் பாலுணர்வு மக்களைத் தாக்கம் செய்து கொண்டிருப்பதை நாம் கண்மூடிப் புறக்கணிக்க முடியாதுதான்!

அமைச்சர்களின் மனைவிகள் கூறும் கருத்துகள் 'தமிழகத்தில் பெண் நிலைமை'யும், 'ஆளும் பகுத்தறிவுத் தலைமைகளின் குடும்ப அவலமும்' புலப்படுத்துவன;

குடும்பம்—வாழ்க்கை—அரசியல்—பொது வாழ்வு இவற்றில் மிகக் குறைந்த இடைவெளிகளை உடையவர் ஒரு சிலரே. அவர்களில் பாவலரேறு குறிப்பிடத் தக்கவர் என்றே கூறலாம்!

—பறம்பை அறிவன்.

## நமக்குத் தேவை!

தொகுப்பு

நமக்குத் தேவைமிக மிகத் தேவை—இன்று
நமக்குத் தேவைமிக மிகத்தேவை!

எடுப்பு

திமிர்மிகு வடவரின் திமிரினைப் போக்கிட
நமதன்னை நாட்டினை நமக்கென ஆக்கிட—(ந)

முடிப்பு

1 துள்ளி எழுந்து பகை கிள்ளி எறியும்படை—
'சீயம்' புலியெனவே பாயும் இளைஞர்படை—
நள்ளிரவில் வந்திட்ட கள்ளத்தன் ஆட்சியினை
நாட்டை விட்டேவிரட்டிக் கேட்டைத்தவிர்க்கும்
படை (ந)

2 அன்றிங்கு வந்தவர் நம் நன்றியை மறந்திட்-
டார்;
இன்றவர் நம்மினத்தை அழித்திடத் துணிந்-
திட்டார்;
வென்றவரை வடக்கே விரட்டி நமதுரிமை
மீட்டெடுத் திடமிக ஆற்றல் படைத்தபடை (ந)

—பாவலர் கொ. செ. சின்னப்பனார்.

...த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 47

...ருவரின் அறிவு வெளிப்பாட்டில் அவரின் ...மாழி, இன, நாடு பற்றிய முன்னேற்றக் ...று ஏதோ ஒரு வகையில் இருக்கவில்லை- ...னால் அவ்வறிவால் யாருக்கும் பயனில்லை.


(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 130.

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829
உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

பெறுநர்: நூல் அஞ்சல்

திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657